**செய்தி வெளியீடு எண்: 090** **நாள்: 03.02.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் **2.2.2018** அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு **7** கோடியே **25** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conference) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, சென்னை, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் **20** கோடியே **94** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, கிராமப்புற மாணாக்கர்கள் உயர்கல்வி கற்பதற்காக நகரங்களை நாடி செல்ல சிரமப்படாமல், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே உயர்கல்வி கற்பதற்கு ஏதுவாக கடந்த ஆறரை ஆண்டுகளில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில், **4** அரசு பொறியியல் கல்லூரிகள், **56** அரசு / பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் **16** அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் என **76** அரசு புதிய கல்லூரிகள் துவக்கியுள்ளதோடு, அரசு கல்லூரிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தியுள்ளது. இதன் மூலம், மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு மாநிலம் **46.9** சதவிகிதத்தைப் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

அந்த வகையில், தூத்துக்குடி மாவட்டம், நாகலாபுரத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு **7** கோடியே **25** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம், கடலாடியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு **7** கோடியே **25** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டடம்; திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகத்தின் மண்டல அலுவலகத்தில், **1** கோடியே **43** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

கல்வியியல் கட்டடம்; இராமநாதபுரம் மாவட்டம், புல்லங்குடியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிக்கு 2 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்கள்; சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தில் 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள யோகா மையம் மற்றும் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; சென்னை, ராணி மேரி அரசுக் கல்லூரியில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கணினி அறிவியல் துறை கட்டடம்; சென்னை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக ஆராய்ச்சி விரிவாக்க மையத்தில் 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடம்; திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உள்விளையாட்டு அரங்கம்; திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் விடுதிக் கட்டடம்; சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் 4 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வைரவிழா கட்டடம்;

என மொத்தம் 28 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.சுனீல் பாலீவால், இ.ஆ.ப., கல்லூரிக் கல்வி இயக்குநர் திருமதி மஞ்சுளா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 3.2.2018**